RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 361 | டிசம்பர்.31 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## அதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நெசவாளர்கள் நிலையை உயர்த்த நடவடிக்கை: பழனிசாமி உறுதி



சென்னை, டிச.31-

அதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நெசவாளர்கள் நிலையை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என பழனிசாமி உறுதி அளித்துள்ளார். அதிமுக பொதுச்செயலாளரும், முன்னாள் முதல்வருமான பழனிசாமி, 'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.அதன்படி, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திருத்தணி மற்றும் திருவள்ளூர் சட்டப்பேரவை தொகுதிகளில் நேற்று சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இதில், திருத்தணி சட்டப்பேரவை தொகுதியில், வீரகநல்லூரில் பழனிசாமி பேசியதாவது: நான் எழுச்சி பயணம் மேற்கொண்ட அனைத்து தொகுதிகளிலும் மக்களின் வரவேற்பு அமோகமாக உள்ளது. அதிமுகவின் வெற்றியை மக்களின் எழுச்சியில் பார்க்க முடிகிறது.

அடுத்தாண்டு தேர்தலில் அதிமுக வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். அதிமுக கூட்டணி 210 இடங்களில் வெல்லும். திமுக ஆட்சியில், அவர்கள் குடும்பம் மட்டும் வளமாகியது. கருணாநிதி, ஸ்டாலின், உதயநிதி, அடுத்து இன்பநிதி. இந்த வாரிசு அரசியல் தேவையா? திமுக ஆட்சிக்கு வந்த உடன் நீட் தேர்வு ரத்து என்றார்கள். ரகசியம் தெரியும் என்றார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்.இப்போது எங்களால் முடியாது என்று சொல்லிவிட்டார் முதல்வர் ஸ்டாலின். இதுதான் அந்த ரகசியம். மக்களை ஏமாற்றி வாக்குகளை பெற்று அந்தர்பல்டி அடித்துவிட்டது திமுக. 2021 தேர்தலில், கொடுத்த 525 வாக்குறுதிகளில், நான்கில் ஒரு பங்கை கூட திமுக நிறைவேற்றவில்லை.

திருத்தணி சுப்பிரமணியசுவாமி கோயிலில் உள்ளூர் மக்கள் செவ்வாய் கிழமைகளில் வழிபாடு செய்ய சிறப்பு அனுமதி கொடுக்கப்பட்டது. அந்த அனுமதி, திமுக ஆட்சியில் மறுக்கப்பட்டுள்ளது. அதிமுக ஆட்சியில் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயிலில் உள்ளூர் மக்கள் செவ்வாய்க்கிழமைகளில் தரிசனம் செய்ய சிறப்பு அனுமதி வழங்கப்படும்.விசைத்தறி, கைத்தறி நெசவாளர் நிலை சரிந்துபோய் இருக்கிறது. நெசவாளர் நிலை மீண்டும் சிறக்க அதிமுக ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார். இந்த நிகழ்வில், அதிமுக அமைப்பு செயலாளரும், முன்னாள் எம்பியுமான கோ. அரி, திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி.வி.ரமணா உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

## சர்வதேச இளையோர் பாய்மர படகுப் போட்டி: உதயநிதி அதிகாரிகளுடன் ஆலோசனை



சென்னை, டிச.31-

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், இந்திய, சர்வதேச இளையோர் பாய்மரப் படகுப்போட்டி சாம்பியன்ஷிப் 2026 மற்றும் டிரையத்லான் சென்னை 2026 போட்டிகள் நடைபெற உள்ளன. இதற்கான முன்னேற்பாட்டு பணிகள் குறித்து துணை முதல் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அவர் பேசியதாவது: சர்வதேச இளையோர் பாய்மர படகுப் போட்டி சாம்பியன்ஷிப் 2026 போட்டியையொட்டி, சென்னையில் ஜன.6ம் தேதி முதல் 9ம் தேதி வரை பல்வேறு வகையிலான படகுப்போட்டிகள், பாய்மரப் பலகை சறுக்கு போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

இப்போட்டிகளில் இந்தியா, அயர்லாந்து, சீசெல்ஸ், மொரீசியஸ், ஈராக், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், அல்ஜீரியா, இலங்கை, மலேசியா, தைவான், ஸ்வீடன், ரஷ்யா மற்றும் இங்கிலாந்து ஆகிய 13 நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் கலந்துகொள்ள உள்ளனர்.

இதுவரை பாய்மரப் படகுப் போட்டிகளை தொலைக்காட்சிகளில் மட்டுமே பார்த்து ரசித்த சென்னை மக்களுக்கும் இந்திய ரசிகர்களுக்கும் இந்த போட்டி நீங்காத நினைவுகளை அளிக்கும்.

அதேபோல், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்படும் டிரையத்லான் சென்னை 2026 போட்டியையொட்டி 1.50 கி.மீ நீச்சல், 40 கி.மீ சைக்கிளிங், 10 கி.மீ ஓட்டம் என மொத்தம் 51.50 கி.மீ தூரம் கொண்ட இரும்பு மனிதன் டிரையத்லான் சென்னை போட்டி ஜன.10 மற்றும் 11ம் தேதிகளில் நடைபெற உள்ளது.இந்தப் போட்டிகளில் 1,200க்கும் மேற்பட்ட இந்திய மற்றும் சர்வதேச விளையாட்டு வீரர்கள் பங்கேற்க பதிவு செய்துள்ளனர். இந்த இரண்டு போட்டிகளையும் சிறப்பாக நடத்தும் வகையில் போக்குவரத்து, பாதுகாப்பு, அவசர மருத்துவ சேவைகள், தங்குமிட வசதி, வீரர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு முன்னேற்பாடு பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை செயலர் அதுல்ய மிஸ்ரா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## வங்கதேசத்தில் இந்துக்கள் மீதான தாக்குதலுக்கு இந்திய ஷியா தனிச்சட்ட வாரியம் கடும் கண்டனம்

லக்னோ, டிச.31-

வங்கதேசத்தில் இந்து சிறுபான்மையினர் மீது நடத்தப்படும் தாக்குதலுக்கு அனைத்து இந்திய ஷியா தனிச் சட்ட வாரியம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அனைத்து இந்திய ஷியா தனிச் சட்ட வாரியத்தின் (ஏஐஎஸ்பிஎல்பி) வருடாந்திர கூட்டம் லக்னோவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்குப் பின்னர் ஏஐஎஸ்பிஎல்பி பொதுச்செயலாளர் மவுலானா யசூப் அப்பாஸ் கூறியதாவது: வங்கதேசத்தில் இந்துக்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளை இந்தக் கூட்டம் வன்மையாகக் கண்டித்தது.மேலும், அப்பாவி மனிதர்கள் யாரையும் கொல்வதை இஸ்லாம் கடுமையாகத் தடுக்கிறது என்றும், மதத்தின் பெயரால் இத்தகைய மனிதாபிமானமற்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் அதிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதுமேலும் இந்தக் கூட்டத்தில், வக்பு திருத்த சட்டத்தை திரும்பப் பெற வேண்டும், பொது சிவில் சட்டம் மற்றும் தேசிய குடிமக்கள் பதிவேடு ஆகிவற்றை அமல்படுத்தும் முடிவை திரும்பப் பெற வேண்டும் என்பன உட்பட 23 அம்ச தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## "தமிழக அரசின் பொறுப்பின்மையைக் காட்டுகிறது திருத்தணி சம்பவம்" : விஜய் விமர்சனம்



சென்னை: டிச.31-

"இளைஞர்கள் எக்கேடு கெட்டு வீணாய்ப் போனால் நமக்கென்ன என்ற ஆளும் அரசின் அலட்சியத்தையும் பொறுப்பின்மையையுமே திருத்தணி சம்பவம் எடுத்துக் காட்டுகிறது" என தவெக தலைவர் விஜய் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "சென்னையிலிருந்து திருத்தணி சென்ற ரயிலில் இளைஞர்கள் சிலர், மற்றொரு இளைஞரைக் கொடூரமாகத் தாக்கிய சம்பவம், தமிழகம் எத்தகைய அபாயகரமான எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கிறது என்ற அச்சத்தையும் அதிர்வலைகளையும் மக்களிடையே ஏற்படுத்தி உள்ளது.

இளைஞர்கள் தவறான பாதையில் செல்வதை அரசு முன்கூட்டியே கண்டறிந்து தடுக்கவில்லை. இளைஞர்கள் எக்கேடும் கெட்டு வீணாய்ப் போனால் நமக்கென்ன என்ற ஆளும் அரசின் அலட்சியத்தையும் பொறுப்பின்மையையுமே இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு, போதைப் பொருட்களால் இளைஞர்களின் எதிர்காலம் சீரழிந்து வருகிறது. தமிழகத்தில் இளைஞர்களை நல்வழிப் பாதையில் கொண்டுசெல்லும் திட்டங்கள் இல்லை. இளைஞர்கள் நல்ல முறையில் கல்வி கற்க, ஏற்ற சூழல் இல்லை. தகுதிக்கு ஏற்ற வேலைவாய்ப்புகள் இல்லை.

புத்தாக்கம் இல்லை. புதிய முயற்சிகளுக்கு ஊக்கம் இல்லை. இவை எவற்றையும் ஏற்படுத்திக் கொடுக்காமல், யாருக்காக இந்த ஆட்சியை நடத்துகிறீர்கள்?

எஞ்சியிருக்கக் கூடிய ஆட்சிக் காலத்திலாவது போதைப் பொருட்கள் புழக்கத்தை முழுவதுமாகக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கபட நாடக அரசை வலியுறுத்துகிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## விஐபி தொகுதிகளின் வரைவு வாக்காளர் பட்டியல்: ஓர் சிறப்பு அலசல்!




சென்னை, டிச.31-

சட்டசபை தேர்தலையொட்டி தமிழக வரைவு வாக்காளர் பட்டியல் வெளியாகி உள்ளது. பல்லாயிரக்கணக்கான பேர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட நிலையிலும், ஒரே முகவரியில் பல வாக்காளர்கள் பெயர் இடம் பெற்றிருந்தது குழப்பத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது. முதல்வர், அமைச்சர்கள் உள்ளிட்ட விஐபி தொகுதிகளிலும் இதே நிலைமை நீடிக்கிறது. இது குறித்து ஓர் சிறப்பு அலசல்!

கொளத்தூர் தொகுதி (முதல்வர் ஸ்டாலின்)

முதல்வர் ஸ்டாலினின் கொளத்தூர் தொகுதி சிறிய தொகுதியாக இருந்தாலும் அங்கு எஸ்.ஐ.ஆர்., பணிகளுக்குப் பின், இறந்தோர், தொகுதி மாறியோர், விடுபட்டவை என ஒரு லட்சத்து 3,812 பேர் நீக்கப்பட்டு உள்ளனர். அதேபோல் ஒரே முகவரி, இரண்டு இடங்களில் ஓட்டு வைத்திருக்கும் நபர்களும் கண்டறியப்பட்டு உள்ளனர்.

சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி (உதயநிதி)

துணை முதல்வராக உள்ள உதயநிதி ஸ்டாலினின் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் 89 ஆயிரத்து 241 வாக்காளர்களின் பெயர் நீக்கப்பட்டு உள்ளன.

மதுரை கிழக்கு தொகுதி (அமைச்சர் மூர்த்தி)

அமைச்சர் மூர்த்தியின் மதுரை கிழக்கு தொகுதி தமிழகத்தில் 2வது பெரிய தொகுதி. 3.70 லட்சம் ஓட்டுகளுக்கு மேல் உள்ளது. இங்கு, ஒரே வீட்டில் 200க்கும் மேற்பட்ட ஓட்டுகள் முறைகேடாக சேர்க்கப்பட்டு உள்ளன. எஸ்ஐஆர் பணியின் போது, 20 ஆயிரம் ஓட்டுக்கள் நீக்கப்பட்டு உள்ளன.

போடி தொகுதி (பன்னீர் செல்வம்)

தமிழக முன்னாள் முதல்வர் பன்னீர் செல்வத்தின் போடி தொகுதியில், சில பாகங்களில் ஒரே வீட்டு எண்ணில் பல வாக்காளர்கள் வசிப்பதாக வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. உதாரணமாக, முந்தல் ஆதிதிராவிடர் காலனி, 93 பேர், கொட்டக்குடி, குரங்கணியில் 87 பேர், பூதிப்புரம், கோட்டை மேட்டுத்தெருவில் 73 பேர் ஒரே வீட்டில் வசிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 24 ஆயிரத்து 386 பேர் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டு உள்ளனர். எஸ்ஐஆர் பணியில் மொத்தமாக தேனி மாவட்டத்தில், 1.25 லட்சம் வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர்.

காட்பாடி தொகுதி (அமைச்சர் துரைமுருகன்)

அமைச்சர் துரை முருகனின் வேலூர் மாவட்டம் காட்பாடி தொகுதியில் 35 ஆயிரத்து 666 பேரின் பெயர்கள் வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. மொத்தமாக இறந்தோர், இரட்டை இடத்தில் ஓட்டுப்பதிவு உட்பட பல்வேறு காரணங்களால் வேலூர் மாவட்டத்தில் மட்டும் 2 லட்சத்து 15 ஆயிரத்து 25 வாக்காளர்கள் நீக்கப்பட்டு இருக்கின்றனர்.

எடப்பாடி தொகுதி

அதிமுக பொதுச்செயலாளரும், எதிர்கட்சி தலைவருமான இபிஎஸ்சின் சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதியில் 26 ஆயிரத்து 375 வாக்காளர்களின் பெயர்களானது நீக்கப்பட்டு உள்ளது. மொத்தமாக சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து தொகுதிகளையும் சேர்த்து 3 லட்சத்து 62 ஆயிரத்து 429 பேர் நீக்கப்பட்டு உள்ளனர்.

ஆலந்தூர் தொகுதி (அமைச்சர் அன்பரசன்)

அமைச்சர் தா.மோ.அன்பரசனின் ஆலந்தூர் தொகுதியில் 1 லட்சத்து 32 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளன. அதிக வாக்காளர்கள் நீக்கப்பட்ட 3 தொகுதிகளில் ஆலந்தூரும் ஒன்று ஆகும்.

திருநெல்வேலி தொகுதி (நயினார் நாகேந்திரன்)

தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரனின் திருநெல்வேலி தொகுதியில் 42ஆயிரத்து 119 வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் 2 லட்சத்து 14 ஆயிரத்து 957 பேர் நீக்கப்பட்டு இருக்கின்றனர்.

திருவெறும்பூர் தொகுதி (அமைச்சர் மகேஷ்)

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மகேஷ் வெற்றி பெற்ற திருவெறும்பூர் தொகுதியில் 39 ஆயிரத்து 983 வாக்காளர்கள் நீக்கப்பட்டு உள்ளனர்.

திருச்சி மேற்கு தொகுதி (அமைச்சர் நேரு)

நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் நேருவின் திருச்சி மேற்கு தொகுதியில் 57 ஆயிரத்து 339 வாக்காளர்கள் நீக்கப்பட்டு உள்ளனர்.

## கலீதா ஜியா மறைவு: 3 நாட்கள் துக்கம் அனுசரிப்பு; வங்கதேச அரசு அறிவிப்பு!

டாக்கா, டிச.31-

வங்கதேசத்தின் முதல் பெண் பிரதமரும், அந்நாட்டின் எதிர்க்கட்சியான வங்கதேச தேசியக் கட்சியின் தலைவருமான கலீதா ஜியா மறைவை அடுத்து, மூன்று நாட்கள் அரசு துக்கம் அனுசரிக்கப்படும் என்று அந்நாட்டின் இடைக்கால அரசாங்கத்தின் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸ் தெரிவித்துள்ளார். கலீதா ஜியாவின் மறைவை அடுத்து முகமது யூனுஸ், தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அப்போது அவர், ''இன்று நாட்டுக்கு மிகவும் துயரமான நாள். நாட்டின் ஜனநாயக அரசியலின் முன்னணி ஆளுமையாக விளங்கிய கலீதா ஜியா இன்று நம்மிடம் இல்லை. ஜனநாயகம், பல கட்சி அரசியல் கலாச்சாரம், மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான போராட்டம் ஆகியவற்றில் அவரது அசாதாரண பங்கு வரலாற்றில் நிலைத்திருக்கும்தேசத்தின் இந்த கடினமான காலத்தில் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். இந்த துக்க தருணத்தைப் பயன்படுத்தி யாரும் ஸ்திரமற்ற நிலையை உருவாக்கவோ, நாசகாரச் செயல்களில் ஈடுபடவோ அனுமதிக்காதபடி அனைவரும் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்தில் நாம் அனைவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். மூன்று நாட்கள் அரசு துக்கம் அனுசரிக்கப்படும். அவரது இறுதிச் சடங்கு நடைபெறும் தினம் (டிச. 31) பொது விடுமுறை என அறிவிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

கலீதா ஜியா மறைவு: கலீதா ஜியா (டிச. 30) அதிகாலை காலமானார். நீண்டகாலமாக உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு டாக்காவிலுள்ள மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த அவர், இன்று காலை 6 மணியளவில் உயிரிழந்ததாக அவரது கட்சி அதிகாரபூர்வமாக அறிவித்தது. கல்லீரல் பாதிப்பு, நீரிழிவு மற்றும் இதயம் தொடர்பான பல்வேறு உடல்நலப் பிரச்சனைகளால் கலீதா ஜியா அவதிப்பட்டு வந்தார். கடந்த நவம்பர் 23ம் தேதி நுரையீரல் தொற்று காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் அவரது உடல்நிலை சீராகவில்லை. கடந்த டிசம்பர் 11ம் தேதி முதல் அவர் தீவிர சிகிச்சை பிரிவில் செயற்கை சுவாசக் கருவி உதவியுடன் சிகிச்சை பெற்று வந்தார். வெளிநாட்டு மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் அவருக்குத் தீவிர சிகிச்சை அளித்து வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி இன்று அவர் உயிரிழந்தார்.

வங்கதேசத்தின் முன்னாள் அதிபர் ஜியாவுர் ரஹ்மானின் மனைவியான கலீதா ஜியா, 1981ல் தனது கணவர் படுகொலை செய்யப்பட்ட பிறகு அரசியலில் நுழைந்தார். 1984ம் ஆண்டு முதல் பிஎன்பி கட்சியின் தலைவராகப் பொறுப்பு வகித்த அவர், 1991 முதல் 1996 வரையிலும், மீண்டும் 2001 முதல் 2006 வரையிலும் வங்கதேசத்தின் பிரதமராக பதவி வகித்தார்.17 ஆண்டுகளாக லண்டனில் வாழ்ந்து வந்த அவரது மூத்த மகன் தாரிக் ரஹ்மான், சில நாட்களுக்கு முன்புதான் வங்கதேசம் திரும்பியிருந்தார். வங்கதேச அரசியலில் ஷேக் ஹசீனாவுக்குப் பெரும் சவாலாகத் திகழ்ந்த கலீதா ஜியாவின் மறைவு அந்நாட்டின் அரசியல் வட்டாரத்தில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



# அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் பிறந்தநாள் விழா: காளையார்கோவில் தெற்கு ஒன்றிய துணைச்செயலாளர் கோதண்டபாணி அன்னதானம் ஏற்பாடு

காளையார் கோவில், டிச.31-

சிவகங்கை மாவட்ட திமுக செயலாளர், தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் அரளிக்கோட்டை கேஆர். பெரியகருப்பன் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு சிவகங்கை மாவட்ட திமுகவினர் ஆலயங்களில் சிறப்பு பூஜை புணஷ்காரங்கள், அன்னதானம், கபடி, கிரிக்கெட் விளையாட்டு போட்டிகள், நலத்திட்ட உதவிகள், நாளிதழ் விளம்பரங்கள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடினர்.

பொதுவாகவே சிவகங்கை மாவட்ட திமுகவை தொடர்ந்து இருபத் தைந்து ஆண்டுகளுக்கு மேலாக வழிநடத்திக் கொண்டுவரும் கேஆர். பெரியகருப்பன் தனது பிறந்தநாள் விழாவினை ஆடம்பரமாக செய்யப் படுவதை அவ்வளவாக விரும்புவதில்லை.

இருப்பினும் தொண்டர்களின் ஏகபோக பாசப்பிணைப்பு, மரியாதை கலந்த அன்பின் உற்சாக வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.




அந்த வகையில் காளையார்கோவில் தெற்கு ஒன்றிய திமுக துணைச் செயலாளர், தொழிலதிபர் கோலாந்தி ஆர். கோதண்டபாணி ஏற்பாட்டில் மாண்புமிகு அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் அவர்கள் நீடூழி வாழ வேண்டுமென வாழ்த்தி அவரது பெயரில் தொடர்ந்து ஆறு வருடங்களாகவே கோவில்களில் அன்னதானம் செய்து வருகிறார்.

அந்த வகையில் நேற்று நாட்டரசன் கோட்டை பேரூர்க்கழகம் அருள்மிகு கண்ணுடையநாயகி அம்மன் கோவில் வளாகத்தில் அமையப்பெற்ற அன்னதானக் கூடத்தில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு அறுசுவை சைவ உணவு பரிமாறப்பட்டது.

இந்த நிகழ்ச்சியை சிவகங்கை நகர் திமுக சுற்றுசூழல் அணி அமைப்பாளர், நகர்மன்ற மேனாள் உறுப்பினர் சுப. ஜெயக்குமார், ஆலய ஊழியர்களுடன் இணைந்து அன்னதான நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

மேலும் இதுகுறித்து கூறிய கோலாந்தி கோதண்டபாணி அமைச்சர், மாவட்டக்கழக செயலாளர் என்றென்றும் பூரண உடல் நலத்தோடு வாழ வேண்டும் எனவும், அவர் இன்னும் பூரண ஆயுளுடன் இருந்து ஏழை எளிய பொதுமக்கள் மற்றும் கழகத் தொண்டர்களுக்கு நன்மைகள் செய்திட வேண்டுமெனவும் தெரிவித்தார்.






# திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் .மனிஷ் நாரணவரே போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்

திருப்பூர், டிச.31-

திருப்பூர் மாவட்டம் ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே கடந்த 29 ஆம் தேதி (போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க, போதை பொருட்கள் இல்லாத தமிழ்நாட்டை என்னும் இலக்கை அடையும் விதமாக போதை பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் குறித்து மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடையே பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் வருவாய்துறை, காவல் துறை, போக்குவரத்துத்துறை, பள்ளிக்கல்வித்துறை, உயர்கல்வித்துறை மற்றும் மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வைத் துறையின் சார்பில் போதையில்லாத தமிழ்நாடு என்ற நிலையினை உருவாக்கும் பொருட்டு கள்ளச்சாராயம், போலி மதுபானங்கள் மற்றும் போதைப்பெருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் கொடியசைத்து துவக்கி வைத்தார். இப்பேரணி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கி தென்னம் பாளையம் வழியாக எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலை கல்லூரியில் நிறைவடைந்தது. இப்பேரணியில் 300க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவியர்கள் கலந்து கொண்டு போதை பொருள் எதிர்ப்பு தொடர்பான பதாகைகளை ஏந்தியவாறு பேரணியாக சென்றனர்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் கல்லூரி மாணவிகள் முன்னிலையில் போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன். மேலும் எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற்குள்ளானவர்களை மீட்டெடுத்து அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன்.

போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்குத் துணைநிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதிகூறுகிறேன் என போதைப் பொருட்கள் ஒழிப்பு உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில், உதவி ஆணையர் (கலால்) செல்வி, கல்லூரி மாணவியர்கள் மற்றும் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



■ வேலூர் நகர அரங்கில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், பூம்புகார் விற்பனை நிலையம் நடத்தும் கைவினை கண்காட்சியை மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலெட்சுமி, நேற்று திறந்து வைத்து, கண்காட்சியை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் பகார்த்திகேயன், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா. 2 வது மண்டலக்குழுத்தலைவர் ஆர்.நரேந்திரன், மேலாளர் நரேந்திரபோஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




■ திருப்பூரில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் கடந்த (26.12.2025) திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சி ரோட்டரி மஹாலில் வருவாய்த்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்கள். உடன் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ஃபெலிக்ஸ் ராஜா, திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், தாராபுரம் நகர்மன்றத்தலைவர் பாப்புக்கண்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.



## பல்லாவரம் தனியார் பள்ளியில் தமிழ்நாடு வில்வித்தை சங்கம் சார்பில் மாநில அளவிலான வில்வித்தை போட்டி, ஏராளமான வீரர், வீராங்கனைகள் பங்கேற்பு

சென்னை, டிச.31-

சென்னை அடுத்த பல்லாவரம் தனியார் பள்ளியான வேல்ஸ் வித்யாஷ்ரம் பள்ளியில் தமிழ்நாடு வில்வித்தை சங்கம் சார்பில் மாநில அளவிலான வில்வித்தை போட்டி டாட் தலைவர் குமார் ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. போட்டியை வேல்ஸ் பல்கலைகழகத்தின் நிறுவன தலைவர் மற்றும் வேந்தர் ஐசரி கணேஷ் துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு வில்வித்தை சங்கமும், தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கம் இணைந்து முதல் முறையாக உலக வில்வித்தை போட்டிகளை நடத்தியது. இந்நிகழ்ச்சிக்கி சிறப்பு அழைப்பாளராக டாட் (TAAT) பொதுசெயலாளர் மற்றும் இந்திய வில்வித்தை சங்கத்தின் இனைசெயலாளர் திணேஷ் பிரதீப், துனைத் தலைவர் அஸ்வின் குமார் ஐயர், உலக வில்வித்தை கூட்டமைப்பின் காண்டினெண்டல் ஜட்ஜ் மணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது குறித்து வில்வித்தை சங்க துனைத் தலைவர் அஸ்வின் பேசுகையில் மாநில அளவிலான வில்வித்தை போட்டி முதல் முறையாக நடைபெறுவதாகவும் இதில் 13, 15, 18, 21 வயதிற்கு உட்பட்டவர்களுக்கும் அதற்கு மேல் உள்ள வயதினருக்கும் 5 நிலைகளில் நடைபெறும் போட்டி எனவும் வெற்றிபெற்றவர்களுக்கு பதக்கம், கோப்பைகள் மற்றும் அங்கீகரிக்கபட்ட சான்றிதழ்கள் வழங்கபடும், இந்த சான்றிதழ்கள் எதிர்காலத்தில் சிறந்த பள்ளி, கல்லூரிகளில் சேர உறுதுனையாகஇருக்கும், இந்த இரண்டு நாட்களில் நடைபெறும் போட்டியில் 1000 த்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு அம்புகளை எரிய உள்ளனர் எனவும் இதற்கு அடுத்து தேசிய அளவிலான போட்டிகள் நடைபெறும் என தெரிவித்தார்.



# தாய் மாற்றுத்திறனாளிகள் இல்லத்தில் அமைச்சர் கேஆர்.பி. பிறந்தநாளை முன்னிட்டு காலைச் சிற்றுண்டி வழங்கப்பட்டது

## மாவட்ட திமுக தொண்டரணி வண்டவாசி கோவிந்தன் ஏற்பாடு

சிவகங்கை, டிச.31-

சிவகங்கை மாவட்டச் செயலாளர், கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரியகருப்பன் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு, சிவகங்கை புறநகர் பகுதியில் அமைந்துள்ள தவழும் மாற்றுத் திறனாளிகள் இல்லமான தாய் இல்லத்தில் காலைச் சிற்றுண்டி வழங்கி கொண்டாடினர்.

மாவட்ட திமுக தொண்டரணி துணை அமைப்பாளர், ஒன்றியக்குழ மேனாள் உறுப்பினர் வண்டவாசி கா. கோவிந்தராஜன், தொடர்ந்து பனிரெண்டு வருடங்களாக அமைச்சர் பெரியகருப்பன் பிறந்தநாளை முன்னிட்டு தாய் இல்லத்தில் உணவு வழங்கி வருகிறார்.

அந்த வகையில் இந்த வருடமும் தாய் இல்லத்தில் இனிப்பு, காலைச் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியின் போது ஒருங்கிணைந்த சிவகங்கை ஒன்றிய திமுக மேனாள் பொருளாளர் சக்கந்தி காஜா மைதீன், பில்லூர் கிளைக்கழக திமுக செயலாளர் வழக்கறிஞர் இரா. கார்த்திகேயன், ஒன்றிய துணைச் செயலாளர், வில்லிபட்டி பண்ணையார் ஆ. இராமமூர்த்தி, இலந்தங்குடி கிளைக்கழக செயலாளர் பொன்னழகு என்ற ஏழுமலை, ஓய்வு பெற்ற போக்குவரத்து தொமுச தடியப்பன், ஒருங்கிணைந்த சிவகங்கை ஒன்றிய மேனாள் மாணவரணி அமைப்பாளர் முடிகண்டம் ஆனந்தக்குமார் சிவமூர்த்தி ஆகியோருடன், தாய் இல்ல நிர்வாகியும், மாநில மாற்றுத்திறனாளிகள் வாரிய உறுப்பினரும், மானாமதுரை நகர்மன்ற நியமன உறுப்பினருமான கே. ஜே. டி. புஷ்பராஜ் என்ற மலர்மன்னன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்..

# பழனி அருள்மிகு ஸ்ரீ இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு அதிகாலை பரமபதவாசல் திறக்கப்பட்டது

## ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று வழிபாடு செய்தனர்

பழனி, டிச.31-

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு வைணவத் திருக்கோயில்களில் மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசி தினமான இன்று அதிகாலை பரமபதவாசல் எனப்படும் சொர்க்க வாசல் திறக்கும் வைபவம் நடைபெற்றது. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் முக்கிய உபகோயிலான ஸ்ரீ இலக்குமி நாராயண பெருமாள் கோயிலில் அதிகாலை அருள்மிகு இலக்குமி சமேதர் நாராயணருக்கு சிறப்பு அலங்காரம் மற்றும் பூஜைகள் நடைபெற்றது. தொடர்ந்து நான்கு மணி அளவில் சொர்க்கவாசல் எனப்படும் பரமபதவாசல் திறக்கப்பட்டு அதன் வழியாக பெருமாள் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். கருடாழ்வார் எதிர்சேவை புரிந்தார். சொர்க்கவாசல் திறக்கப்பட்டு, பரமபதவாசல் வழியே சுவாமி எழுந்தருளிய பின் கருடாழ்வார் வாகனத்தில் நான்கு இரதவீதிகளிலும் எழுந்தருளினார். பெருமாளை தொடர்ந்து பக்தர்கள் அனைவரும் சொர்க்கவாசல் வழியாக சென்று அருள் பெற்றனர். இதேபோல பழனியை அடுத்துள்ள பாலசமுத்திரம் அகோபில வரதராஜ பெருமாள் கோயிலிலும் பரமபத வாசல் திறக்கப்பட்டு அருள்மிகு அகோபில வரதராஜ பெருமாள் மற்றும் லட்சுமிதேவி ஆகியோர் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். சொர்க்கவாசல் ராப்பத்து என பத்து நாட்களுக்கு திறந்திருக்கும். சொர்க்கவாசல் திறக்கும் நிகழ்ச்சியில் இணை ஆணையர் மாரிமுத்து உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.





# தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தினர் உண்ணாவிரதப் போராட்டம்

தேனி, டிச.31-

தேனி மாவட்டம் ஊரக வளர்ச்சித்துறை அலுவலகம் முன்பு உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது இதில் புதிய மசோதாவினை வாபஸ் பெற வலியுறுத்தி மத்திய அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டத்தினை விபி ஜி ராம் திட்டம் எனப் பெயர் மாற்றி திருத்தம் செய்த புதிய மசோதா கடந்த சில நாட்களுக்கு முன்பு நிறைவேற்றப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் இன்று




உண்ணாவிரதம் போராட்டம் நடைபெற்றது.

தேனி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் சுமார் 200க்கும் மேற்பட்ட ஊரக வளர்ச்சி துறையினர் போராட்டத்தில்ஈடுபட்டனர். மகாத்மா காந்தி ஊரக வளர்ச்சி திட்டத்தில் உள்ள மகாத்மா காந்தியின் பெயர் நீக்கிய மத்திய அரசை கண்டித்து இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.மத்திய அரசின் இந்த திருத்த மசோதாவால் மாநிலங்களுக்கு நிதி சுமை அதிகரித்து நிதி நெருக்கடி ஏற்பட்டால்திட்டத்தைக் கைவிடும் அபாயம் இருப்பதாகவும் வருடம் முழுவதும் 100 நாள் வேலை திட்டத்தை செயல்படுத்தப்படும் என்ற நிலை மாறி தற்போது விவசாய பருவ காலங்களில் 60 நாட்கள் வரை திட்டத்தை நிறுத்தி வைக்கும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் ஏழை எளிய விவசாய மக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படுவதாக கூறி இந்த திட்டத்தினை மத்திய மத்திய அரசு வாபஸ் பெற வலியுறுத்தி கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



## தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் தோட்ட பயிர்கள் துறை தோட்டக்கலை கல்லூரி ஆராய்ச்சி நிறுவனம் சார்பாக விழிப்புணர்வு முகாம்

பெரியகுளம், டிச.31-

தேனி மாவட்டம் பெரியகுளம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பிலும் தோட்ட பயிர்கள் துறை தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பிலும் முந்திரிக்கொட்டை மற்றும் கோகோ மேம் பாட்டு இயக்குனரகம் சார்பிலும் மாவட்ட அளவிலான கருத்தரங்கு நடைபெற்றது. இந்த கருத்தரங்கிற்கு முனைவர் தி. பிரபு தலைமையேற்று முந்திரி கொட்டை பயிரிடுதல் சம்பந்தமாக விரிவாக பேசினார் கல்லூரி முதல்வர் எஸ் சரஸ்வதி முன்னிலையிலும் முனைவர் எஸ் முத்துலட்சுமி தொடக்க உரையாற்றினார் பேராசிரியர் கே நாகேஸ்வரி டி என் ஆர் எம் தலைவர் மற்றும் பேராசிரியர் ஜி ஜே ஜானவி முனைவர் கே ஆர் ராஜதுரை முனைவர் பியூலா ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை இணை பேராசிரியர் முனைவர் கே கல்பனா ஆர் நிர்மலா தோட்டக்கலை துணை இயக்குனர் முந்திரி உற்பத்தி தொழில்நுட்பம் பற்றி மக்களுக்கு விரிவாக எடுத்துக் கூறினர் மண் வளத்தை மேம்படுத்துதல் பற்றிய விரிவாக பேசினார் பேராசிரியர் செண்பகவல்லி அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம் மதிப்பு கூட்டல் சந்தைப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி பற்றிய விரிவாக எடுத்து கூறினார் முனைவர் முனைவர் பியூலா ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பற்றி எடுத்து கூறினார் அந்தக் கூட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பயனளிகள் கலந்து கொண்டு கலந்துரையாடினர் . மேலும் குள்ளப்புரம் வேளாண் தொழில்நுட்பக் கல்லூரி மாணவிகள் உசிலம்பட்டி கிருஷ்ணா வேளாண் தொழில்நுட்பக் கல்லூரி பயிலும் இளங்கலை மாணவர்கள் கார்த்திகேயன் சேவக மூர்த்தி அருள்மொழி மாதவ கிருஷ்ணன் திலக் பிரவீன் மற்றும் அன்புமணி ஆகியோர் பங்கேற்றனர்.

## 16 வயது பிளஸ்1 மாணவி; 200 மணி நேர பரதநாட்டிய ஆடி புதிய உலக சாதனை படைக்கும் நிகழ்ச்சி

### தொடர்ந்து 7 நாட்களாக பரதநாட்டியம் ஆடி வரும் மாணவிக்கு பாராட்டு குவிகிறது




சென்னை, டிச.31-

சென்னை தண்டையார்பேட்டையை சேர்ந்த பதினொன்றாம் வகுப்பு படிக்கும் 16 வயது மாணவி மாலினி. இவரது தந்தை அசோக் குமார் ஸ்டீல் பாத்திரம் செய்யும் தொழிலாளி. தாயார் குடும்பத் தலைவி. இப்படிப்பட்ட சூழலில் வடசென்னை தண்டையார்பேட்டையில் இருந்து கொண்டு தனது கனவை நிர்ணயித்து நிறைவேற்றும் தொடர்ந்து செயலாற்றி வருகின்றார்.

மூன்று வயதில் பரதநாட்டியம் கற்றவர் 16 வது வயதில் உலக சாதனைக்கு முயற்சி செய்கிறார். அதாவது '200 மணி நேர தனிநபர் நடன நிகழ்ச்சி' என்கிற உலக சாதனை முயற்சிக்காகப் பரத நாட்டியம் ஆடி வருகின்றார்.

இதற்கான உலக சாதனை முயற்சி கடந்த 23ம் தேதி காலை தொடங்கியது. தொடர்ந்து 7 நாட்களாக காலை 7 மணி முதல் நள்ளிரவு 2 மணி வரை மாலினி பரதநாட்டியம் நடனம் ஆடி வருகின்றார்.

வெறும் பழச்சாறு மட்டும் அருந்திக் கொண்டு இந்த உலக சாதனையைச் செய்து வருகிறார். 200 மணி நேர சாதனையை ஜனவரி 3ஆம் தேதி நிறைவு செய்கிறார். மாணவியின் இந்த புதிய உலக சாதனையை ஏராள மாணோர் பார்வையிட்டு மாணவிக்கு பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

உலகசாதனை குறித்து மாணவி மாலினி கூறுகையில், சாதாரண குடும்பத்தில் இருந்து வந்த நான், 200 மணி நேர பரதநாட் டியம் ஆடி உலக சாதனையை செய்யும் முயற்சியில் இறங்கி இருக்கிறேன். இந்த முயற் சியில் வெற்றி பெறுவேன் என்று நம்புகிறேன். என்னால் செய்ய முடியும் என்கிற போது நல்ல நிலையில் உள்ள மற்றவர்களாலும் இதைச்செய்ய முடியும் என்பதற்காகவே இதைச் செய்கிறேன் என்றார்



■ மதுரை மாநகராட்சி வார்டு எண் 52 ஏழு கடல் தெரு நந்தி சிலை அருகில் புதிய உயர் கோபுர மின் விளக்கை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் வெங்கடேசன் துவக்கி வைத்தார். மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் 52 வார்டு மாமன்ற உறுப்பினர் பாஸ்கர் சி.பி. எம் .மாவட்ட துணை செயலாளர் ஜஹாங்கிர், கரீம், சுந்தர் மலைச்சாமி, சாலையோர வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு ஜல்லிக்கட்டு இளைஞர் பேரவையின் மாநில நிறுவன தலைவர் டாக்டர். ஜெயகார்த்தி ராமமூர்த்தி மதுரை மாவட்ட கோட்டாட்சியரிடம் மனு அளித்தனர். இம்மனுவில் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும் ஜல்லிக்கட்டு ஆலோசனைக் கூட்டத்தில் எங்கள் பேரவை நிர்வாகிகளை அந்தந்த மாவட்ட நிர்வாகம் அழைக்க வேண்டும். ஜல்லிக்கட்டு போட்டியின் போது ஒவ்வொரு சுற்றிலும் தலா 100 வீரர்கள் களம் இறக்க அனுமதிக்க வேண்டும், ஜல்லிக்கட்டு வீரர்களுக்கு இன்சூரன்ஸ்,காயமடைந்தவர் களுக்கு தமிழக அரசின் நிதி உதவி, மரணம் அடைந்தவர்களுக்கு இருபது லட்சமும்,கல்வி அடிப்படையில் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வழங்கிட வேண்டும்,ஆன்லைன் டோக்கன் முறையை ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றி தர வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். இந்நிகழ்வில் ஜல்லிக்கட்டு இளைஞர் பேரவை நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## புரட்சித் தலைவரின் 38ம் ஆண்டு நினைவு நாளை அடுத்து தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முடிச்சூர் ஊராட்சியில் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தும் விதமாக அமைதி ஊர்வலம் நடைபெற்றது

### தமிழக முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் 38ம் ஆண்டு நினைவு தினம் கழகத் தொண்டர்களால் அனுசரிக்கப்பட்டு வருகிறது



முடிச்சூர், டிச.31-

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட முடிச்சூர் ஊராட்சியில் மாவட்ட கழகச் செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் அவர்கள் தலைமையில், மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் வெங்கட்ராமன், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட எம்ஜிஆர் மன்ற துணைத் தலைவர் முன்னாள் முடிச்சூர் ஊராட்சி மன்ற தலைவர் சசிகலா கல்கி ஏற்பாட்டில், பரங்கிமலை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் மதுரப்பாக்கம் எம்.பி.மனோகரன் முன்னிலையில் காந்தி தெரு, நேரு தெரு, எல்லையம்மன் கோவில் தெரு, பொம்மியம்மன் நகர், உள்ளிட்ட பல்வேறு தெருக்களில் மெழுகுவர்த்தி எந்தி நடந்து சென்று இறுதியாக நயரா பெட்ரோல் பங்க் அருகே அலங்கரித்து வைக்கப்பட்ட எம்.ஜி.ஆரின் திரு உருவ படம் அருகே முடிவடைந்தது.

இதில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் கலந்து கொண்டு பல்வேறு வீதிகளில் நடந்து சென்று புரட்சி தலைவருக்கு புகழஞ்சலி செலுத்தினர்.

இறுதியாக ஏழை எளிய மக்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் மலர்மன்னன், மாவட்ட கழக பொருளாளர் பி.கே.பரசுராமன், மாவட்ட கழகப் பிரதிநிதி ஏ.அருள், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட அண்ணா தொழிற்சங்க இணைச் செயலாளர் குணசேகரன், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட மகளிர் அணி பொருளாளர் லலிதா, செங்கல்பட்டு மேற்கு மாவட்ட வழக்கறிஞர் பிரிவு பொருளாளர் சரவணன், தாம்பரம் சட்டமன்றத் தொகுதி வழக்கறிஞர் பிரிவு இணைச்செயலாளர் அஜித்குமார், பரங்கிமலை மேற்கு ஒன்றிய மாணவரணி செயலாளர் யோகேஸ்வர், பரங்கிமலை மேற்கு ஒன்றிய மகளிர் அணி செயலாளர் சரளா, பரங்கிமலை மேற்கு ஒன்றிய கழக துணைச் செயலாளர் கற்பக சீனிவாசன், முடிச்சூர் கிளை செயலாளர்கள் நாராயணன், ராஜேந்திரன், முருகானந்தன், கணேசன், நந்தகோபால், கஜேந்திரன், கேசவன், குமார், ஆதிகேசவன், மணிவேல், ராஜா, ராஜேஷ், ஆறுமுகம், மகளிர் அணி நிர்வாகிகள் விஜயராணி, பாக்கியலட்சுமி, பானுரேகா, ஜோதீஸ்வரி, அணி நிர்வாகிகள் ஜெயக்குமார், நந்தகுமார், ரகுநாதன், பத்மநாபன், சிட்டிபாபு, கணேசன், அங்கமுத்து, மூர்த்தி, சற்குணம், வினோத்குமார், விஜய்கணேஷ், பாக்கியராஜ், வேல்முருகன், ராம்ராஜ், தவமணி, முருகன், ராதாகிருஷ்ணன், பிரேம் குமார், சரவணன், விஜய், பரத், விஷால், நாகராஜ், சுனில், ராஜேந்திரன், ரமேஷ், தாஸ், கார்த்திகேயன், செந்தில்குமார், பரங்கிமலை மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் மாவட்ட கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்



■ புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை தாலுகா துவார் ஊராட்சி கிராம அலுவலக கட்டிடம் ஆபத்தான நிலையில் உள்ளதால் விரைந்து அப்புறப்படுத்த பொதுமக்கள் கோரிக்கை

## குருப்2 மெயின் தேர்வுக்கு கட்டணம் செலுத்த ஜன.2 வரை அவகாசம்

சென்னை, டிச.31-

டிஎன்பிஎஸ்சி குருப்2 மெயின் தேர்வுக்கான கட்டணம் செலுத்த ஜன.2ம் தேதி வரை காலஅவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக டிஎன்பிஎஸ்சி தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் ஏ.சண்முகசுந்தரம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: ஒருங்கிணைந்த குருப்2 மற்றும் குருப்2 ஏ முதல்நிலைத் தேர்வு முடிவுகள் டிச.22ம் தேதி வெளி யிடப்பட்டன.

மெயின் தேர்வு அடுத்த ஆண்டு பிப்.8 மற்றும் 22ம் தேதிகளில் நடத்தப்பட உள்ளன. மெயின் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள தேர்வர்கள் தேர்வுக் கட்டணம் செலுத்தவும், சான்றிதழ்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்யவும் காலஅவகாசம் அளிக்கப்பட்டிருந்தது.

எனினும், இன்னும் 766 தேர்வர்கள் தேர்வுக் கட்டணத்தை செலுத்தவில்லை. அதேபோல், 113 பேர் தேவையான சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யவில்லை. அவர்கள் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யவும், தேர்வுக் கட்டணத்தை செலுத்தவும் கடைசி தேதி ஜன.2ம் தேதி நள்ளிரவு 11.59 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த காலநீட்டிப்பை சம்பந்தப்பட்ட தேர்வர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதற்கு மேல் எவ்வித காலநீட்டிப்பும் தரப்படாது என்று அவர் கூறியுள்ளார்.



## "கோவிந்தா, கோவிந்தா" கோஷம் முழங்க திண்டுக்கல்லில் பெருமாள் கோயில்களில் சொர்க்க வாசல் திறப்பு

திண்டுக்கல், டிச.31-

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பெருமாள் கோயில்களில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு 'கோவிந்தா, கோவிந்தா' கோஷம் முழங்க சொர்க்க வாசல் திறப்பு செவ்வாய்கிழமை (டிச.30) காலை நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம், பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் உப கோயிலான லட்சுமி நாராயண பெருமாள் கோயிலில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு பெருமாளுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது. இதைத்தொடர்ந்து, அதிகாலை 4 மணிக்கு சொர்க்க வாசல் திறக்கப்பட்டு , அதன் வழியாக கருட வாகனத்தில் சுவாமி எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

அப்போது பக்தர்கள் 'கோவிந்தா, கோவிந்தா' என கோஷம் எழுப்பினர். பழநி அருகே உள்ள பாலசமுத்திரம் அகோபில வரதராஜப் பெருமாள் கோயிலில் காலை 5.30 மணிக்கு சொர்க்க வாசல் திறப்பு நடைபெற்றது. பரமபத வாசல் வழியாக வந்து பெருமாள் காட்சி அளித்தார். கோயில் உதவி ஆணையர் லட்சுமி, கண்காணிப்பாளர் அழகர்சாமி மற்றும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

இதே போல், திண்டுக்கல் தாடிக்கொம்பு சவுந்திரராஜ பெருமாள் கோயில், நாகல் நகர் வரதராஜப் பெருமாள் கோயில், எம்விஎம் நகர் வெங்கடாஜலபதி கோயில், கோயில், ரெட்டியார்சத்திரம் கதிர் நரசிங்க பெருமாள் கோயில், வடமதுரை சவுந்தரராஜ பெருமாள் கோயிலில் சொர்க்க வாசல் திறக்கப்பட்டது. அதிகாலை முதல் திரளான பக்தர்கள் வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு லட்டு பிரசாதமாக வழங்கப்பட்டது.



■ மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பெருங்குடி வாஞ்சிநாதன் தெருவில் கடந்த சிறப்பு தீவிர திருத்தம் (SIR 2002/2005) வாக்காளர் பட்டியலில் ஒரு வாக்காளரின் தனது பெயர் அல்லது உறவினரின் பெயர் இடம்பெறாத வாக்காளர்களுக்கு விசாரணை செய்யும் பொருட்டு நோட்டீஸ் வழங்கப்பட்டு வரும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார் வட்டாட்சியர் கவிதா உடனிருந்தார்.

## "கஞ்சா புழக்கம் விவகாரத்தில் உண்மையை மறைக்கிறது திமுக அரசு" அண்ணாமலை குற்றச்சாட்டு

சென்னை, டிச.31-

கஞ்சா விற்பனை மற்றும் புழக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தோல்வியடைந்த திமுக அரசு, இன்று உண்மையை மறைத்து தப்பிக்க முயல்கிறது என பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட சமூக ஊடக பதிவில், ''தமிழகத்தில் எங்கேயுமே கஞ்சா நடமாட்டமே இல்லை என்று கொஞ்சம் கூடக் கூச்சமே இல்லாமல் பேசியிருக்கிறார் திமுக அமைச்சர் மா.சுப்பிரமணியன். முதல்வர் ஸ்டாலின் நடத்தும் நடைபயிற்சி ஷூட்டிங்கிற்கான ஏற்பாட்டிலேயே தனது முழு நேரத்தையும் செலவிடுவதால், அமைச்சருக்கு உண்மை நிலை தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

திருத்தணியில் 17 வயது சிறுவர்கள், கஞ்சா போதையில் ஒரு வடமாநில இளைஞரை அரிவாளால் கடுமையாக வெட்டிய காணொளியை, அமைச்சர் பொய் என்கிறாரா?

தமிழகத்தின் பல பகுதிகளில் கஞ்சா விற்பனை, கடத்தல் மற்றும் வைத்திருப்பு தொடர்பான வழக்குகள் தொடர்ந்து பதிவாகி வருகின்றன.

இந்த ஆண்டில் மட்டுமே, தூத்துக்குடியில் திமுக கவுன்சிலரின் மகன் கஞ்சா வழக்கில் கைது செய்யப்பட்ட சம்பவம், சென்னை, ஆவடி பகுதியில் ஆயிரக்கணக்கான கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது, ராமநாதபுரம், திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில், கஞ்சா விற்பனை மற்றும் கடத்தல் வழக்குகளில் நூற்றுக்கணக்கான கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு பலர் கைது செய்யப்பட்டுள்ளது, கஞ்சா விற்பனை வழக்குகளில் சிறை தண்டனை விதித்து நீதிமன்றமே தீர்ப்பளித்துள்ளது என, இவை அனைத்தும் நாம் நாள்தோறும் படிக்கும் செய்திகள்.

கோவையில் கல்லூரி மாண வர் விடுதிகளில் போலீசார் நடத்திய சோதனையில் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களும் ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மாணவர் விடுதிகள் வரை கஞ்சா விற்பனை ஊடுருவியிருப்பது, போதைப்பொருள் எவ்வளவு ஆழமாக தமிழகத்தில் பரவியுள்ளது என்பதற்கான நேரடி சாட்சி.

கல்வி வளாகங்களே பாதுகாப்பற்ற நிலையில் இருக்கும்போது, கஞ்சா புழக்கம் இல்லை என்று பேசுவது பொதுமக்களுக்குச் செய்யும் துரோகம். கஞ்சா விற்பனை மற்றும் புழக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தோல்வியடைந்த திமுக அரசு, இன்று உண்மையை மறைத்து தப்பிக்க முயல்கிறது.

போதைப்பொருள் சட்டம் ஒழுங்கு பிரச்சினை மட்டும் அல்ல. அது தமிழக இளைஞர்களின் எதிர்காலத்தை சிதைக்கும் சமூகப் பேரழிவு. கஞ்சா கடத்துபவர்கள் மீதும் விற்பனை செய்பவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு, முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க அமைச்சர் மா.சுப்பிரமணியன் முயற்சிப்பது வெட்கக்கேடு'' என தெரிவித்துள்ளார்.



■ வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் பழைய பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த மத்திய / மாநில அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.



# வேலூர் ஆட்சியரகத்தில் குறைதீர்வு நாள் கூட்டத்தில் நலதிட்டம்

வேலூர், டிச.31-

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியரக குறைதீர்வு நாள் கூட்டத்தை தொடர்ந்து நலதிட்டம், அணைக்கட்டு தாலுகா, பொய்கை மோட்டூர் கொல்லை மேடு பகுதியை சார்ந்த செல்வி கிருத்திகாஸ்ரீ தண்ணீர் தொட்டியில் தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தமைக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியின் கீழ் ரூ.1,00,000/ நிதியுதவிக்கான ஆணையினை அவரின் குடும்ப த்தாரிடம் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி வழங்கினார். இந்நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் மா.சிவசுப்பிரமணியன், மாவட்ட பிற்படுத் தப்பட்டோர் நலத்துறை அலுவலர் ஜெயசித்ரா, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திருமாறன், துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் பயனாளிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



■ மதுரை மாவட்டம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மறவன்குளம் ஊராட்சி மன்றத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பாக தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை தொடர்பான சிறு புகைப்பட கண்காட்சி நடைபெற்றது கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் அரசின் நலத்திட்ட செய்திகளை கண்டு களித்து மகிழ்ந்தனர்.



# மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே தலைமையில் நடைபெற்றது

திருப்பூர், டிச.31-

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள்

குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அவை அனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது.

அந்த வகையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலை வசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 313 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரனை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவ்ரே அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) மகாராஜ், (வேளாண்மை) ஷீலா பூசலெட்சுமி, (நிலம்) மலர் மற்றும் அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.-

# இந்து திருக்கோவில்கள் சேவா சங்கம் சென்னை முதலாம் ஆண்டு ஐயப்பன் மலர் பூஜை மற்றும் குருசாமி வந்தனம் நிகழ்ச்சி



சென்னை, டிச.31-

இந்து திருக்கோவில்கள் சேவா சங்கம் சென்னை முதலாம் ஆண்டு ஐயப்பன் மலர் பூஜை மற்றும் குருசாமி வந்தனம் நிகழ்ச்சி (28.12.25) ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10 .00 மணிக்கு இந்து திருக்கோவில்கள் சேவா சங்கம் சென்னை அமைப்பின் சார்பாக சென்னை 33, மேற்கு மாம்பலம், ஆதி கேசவா பெருமாள் கோவில் அருகில் நிறுவனர் மற்றும் தேசிய தலைவருமான, சென்னை, வி. குமார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தேசிய துணை தலைவர்கள்., சைதை எம். ரேஸ் கார்த்திக், கே.ஆர். மணி, ஜி. கே. திருமலை, தேசிய செயலாளர்கள்., டி. கணேஷ், டீ. சம்பத், மாநிலத் தலைவர்., வேளச்சேரி கே. வாசு, மாநில துணைத்தலைவர், வி .கே. குமார் முன்னிலை வகித்தனர். தேசிய துணை தலைவர்கள், பள்ளிக்கரணை ஆர் .மகேஷ், திருவண்ணாமலை,. கருப்பண்ணா ஆசிரமம், எம். அண்ணாதுரை, தேசிய பொதுச்செயலாளர், ஜெ. ரவிக்குமார், தேசிய பொருளாளர், ஜெ. அருண்குமார், மாநிலத் துணைத் தலைவர்., வேளச்சேரி ஏ. வெங்கடேசன், மாநில பொதுச் செயலாளர்., வேளச்சேரி இ.நிக்சன் வரவேற்புரை ஆற்றினார்கள். தேசியச் செயலாளர்கள், சைதை ஏ. ரத்தினகுமார், பி .ராஜாராமன், தேசிய அமைப்பாளர், காட்பாடி எம். மணிகுருசாமி, தேசிய சட்ட ஆலோசகர் ,பள்ளிக்கரணை எம். சரவணன், மாநில பொருளாளர் ,மேற்கு மாம்பலம் கே. சதீஷ்குமார், மாநில ஒருங்கிணைப்பாளர், மேற்கு மாம்பழம் எம் .ஸ்ரீராம், மாநில அமைப்பாளர், ஜி. எஸ். கிஷோர், மாநில செய்தி தொடர்பாளர், கே. கிருபாகரன், மாநிலத் துணைத் தலைவர் எஸ் .மோகன் ராமன், தென் சென்னை மாவட்ட தலைவர் ஆர் .மோகன், தென் சென்னை மாவட்ட செயலாளர், கே .மணிகண்டன், வடசென்னை மாவட்ட தலைவர், எம். கோவிந்தராஜுலு, மத்திய சென்னை மாவட்ட தலைவர், கே.ரவிக்குமார், திருவண்ணாமலை மாவட்ட தலைவர், உமா மகேஸ்வரி, திருவள்ளுவர் மாவட்ட தலைவர், ரேவதி, மத்திய சென்னை மாவட்ட துணைத் தலைவர், சரோஜினி ஆகியோர் நன்றி உரையாற்றினர். சிறப்பு விருந்தினர்கள் :

இந்து சமயம் மற்றும் அறநிலைத்துறை அமைச்சர், பி. கே .சேகர்பாபு, அருளிசை பாடகர் , ஐயப்பனின் செல்லக் குழந்தை ஸ்ரீஹரி, சாஸ்தா உபாசகர், வி. அரவிந்த் சுப்பிரமணியம், மகாபலிபுரம் ஐயப்பன் கோவில் தலைவர் ,சசிகுமார், ஸ்ரீ குமரன் சில்க்ஸ், தி.நகர் ,சென்னை, குமார் குருசாமி உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டனர்..



## வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் 510 மனுக்கள் பெறப்பட்டது மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

வேலூர், டிச.31-

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, பொதுமக்களிடமிருந்து 510 மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மா.சிவசுப்பிரமணியன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் ஜெயசித்ரா, மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்



## சோழிங்கநல்லூர் தொகுதி கந்தன்சாவடியில் பிரச்சாரம் செய்த எடப்பாடி பழனிச்சாமிக்கு அ.தி.மு.க.வினர் வெள்ளி செங்கோல் வழங்கி பிரம்மாண்டமான வரவேற்பு

சோழிங்கநல்லூர், டிச.31-

சென்னை புறநகர் மாவட்டம்,சோழிங்கநல்லூர் தொகுதி, (டிசம்பர் 28.12.2025) அன்று ஞாயிற்றுக்கிழமை கந்தன்சாவடியில் 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு ‘‘மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம்‘‘சூறாவளி பிரச்சாரத்தை தொகுதி வாரியாக இரட்டை இலை சின்னம் பொறிக்கப்பட்ட பஸ்ஸில் அ.தி.மு.க பொதுச்செயலாளர், எடப்பாடி பழனிச்சாமிக்கு அ.தி.மு.க.வினர் சோழிங்கநல்லூர் தொகுதியில் சாலைகளில் மேளதாளங்களுடன் மயிலாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம், வண்ண வண்ண பிரம்மாண்டமான வானவேடிக்கைகள் நிகழ்த்தி உற்சாகமாக வரவேற்றனர். கந்தன்சாவடி எம்.ஜி.ஆர். சாலை, ஜெம் மருத்துவமனை அருகில் பிரம்மாண்டமாக நிகழ்ச்சி ஏற்பாடு செய்து பொது மக்களின் முன்னிலையில் சென்னை புறநகர் மாவட்ட செயலாளர், கே.பி.கந்தன் வெள்ளி செங்கோல் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. அருகில் முன்னாள் தமிழ்நாடு பா.ஜ.க தலைவர், தமிழிசை சௌந்தர்ராஜன் உடனிருந்தார்..

## இரங்கல் செய்தி



இராமநாதபுரம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லெ.பாண்டி தாயார் .லெ. சாரதா அம்மாள் நேற்று (30.12.2025) காலை இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது இறுதி சடங்கு சிவகங்கை மாவட்டம் சோழபுரத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் இன்று (டிச31) நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**வருத்தத்துடன் : மாலை தந்தி நிர்வாக குழுமம்**



# சிவகங்கை மாவட்டத்தில் மருத்துவத்துறையில் ஒப்பந்த அடிப்படையில் வேலைவாய்ப்பு

சிவகங்கை, டிச.31-

சிவகங்கை மாவட்டத்தில் புதிதாக துவக்கப்பட்ட சங்கராபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் (புதுவயல் வட்டாரம்) மற்றும் மானாமதுரை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் தேசிய நலவாழ்வு குழுமத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையிலான செவிலியர் (காலிப்பணியிடம் 7), மருந்தாளுநர் (காலிப்பணியிடம் 2) மற்றும் ஆய்வக நுட்புநர் நிலை3 (காலிப்பணியிடம் 2) மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நெற்குப்பை வட்டார ஆரம்ப சுகாதார நிலையம், சாலைகிராமம் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் கீழ் காலியாக உள்ள ஒப்பந்த அடிப்படையிலான ஐசிடிசி கவுன்சிலர் (காலிப்பணியிடம் 2) ஆகியவற்றை பூர்த்தி செய்வதற்கான விண்ணப்பம் 31.12.2025 முதல் 19.01.2026 வரை பதிவுத் தபால் மூலம் வரவேற்கப்படுகிறது. இப்பணி முற்றிலும் தற்காலிகமானது, எக்காரணம் கொண்டும் பணி நிரந்தரம் செய்யப்பட மாட்டாது.

பணியிடத்திற்கான அறிவிப்பு, விண்ணப்பப் படிவம் மற்றும் செவிலியர் பணியிடத்திற்கான அரசாணை சிவகங்கை மாவட்ட வலைதளம் http:/sivaganga.nic.in வேலைவாய்ப்புப் பிரிவில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். செவிலியர்கள் கோவிட் காலத்தில் பணிபுரிந்ததற்கான அனுபவச் சான்றிதழில் மாவட்ட அளவிலான அதிகாரிகளிடம் கையொப்பம் பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தகுந்த ஆவண நகல்களுடன் செயலாளர், சிவகங்கை மாவட்ட நலவாழ்வுச் சங்கம் / மாவட்ட சுகாதார அலுவலர் அலுவலகத்தில் 19.01.2026 ஆம் தேதிக்குள் பதிவுத் தபால் மூலம் சமர்ப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.



■ கன்னியாகுமரி மாவட்டம் களியக்காவிளை கோழிவிளை பகுதியில் உள்ள கேரளாரு தமிழ்நாடு சோதனை சாவடியில் கனரக வாகனங்கள் நிறுத்தப்படுவதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. விமான நிலையம், ரயில் நிலையம், பள்ளிகல்லூரி வாகனங்கள் செல்ல சிரமம். நெரிசலை குறைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்



■ சென்னை மயிலாப்பூர் தனியார் இன்டர்நேஷனல் ஹோட்டலில் தமிழ்நாடு கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய பல்கலைக்கழகம் சார்பாக பல துறைகளில் சிறந்து விளங்கியவர்களுக்கு கௌரவ (Doctorate) முனைவர் பட்டம் வழங்கும் நிகழ்வில் நீதிபதி. திருமுகு.A.வெங்கடேசன், நடிகர் சின்ன ஜெயந்த், பல்கலைக்கழக வேந்தர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு முனைவர் பட்டம் வழங்கி சிறப்புத்தனர். இதில் எழுத்தாளர் மற்றும் சமூக ஆர்வலர் D.நோபல் லிவிங்கஸ்டன் அவர்களுக்கு (Doctorate ) வழங்கும் போது எடுத்த படம். அருகில் மனைவி ஆசிரியை ஜாய்ஸ் செல்வராணி, மகள் ஏஞ்சலின் உடன் இருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161